சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.30.09.2024
OS.No.151/2020
PW3 : செந்தில்வேல் (வயது 45 ) த/பெ.கோபால்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**1,2 பிரதிவாதிகள் தரப்பு கு.வி**

எனது அண்ணன் பெயர் சரவணன். வழக்கின் 1,2 வாதிகளுக்கும் எனக்கும் வெளிநாட்டில் வேலை வாங்கி கொடுத்தது எனது அண்ணன் தான் என்றால் சரியல்ல. நான் வெளிநாட்டில் கப்பலில் கேட்டரிங்க் வேலை செய்தேன் என்றால் சரிதான். அதேபோல் 1,2 வாதிகளும் என்னை போல வெளிநாட்டில் கப்பலில் வேலை செய்தார்கள் என்றால் சரிதான். வாதிகளின் தாத்தா பெயர் வடமலை என்ற நடேசன் உடையார் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் வடமலைக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். வடமலைக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 3 வாரிசுகள் என்று நினைக்கிறேன், சரியாக தெரியவில்லை. வடமலை சொத்துக்களை எந்த வருடம் பாகம் பிரிக்கப்பட்டது என்றும், எழுத்து மூலமாக பதிவு செய்யப்பட்டதா அல்லது வாய்கரராக பாகம் பிரிக்கப்பட்டதா என்றும் எனக்கு தெரியவில்லை. தாவா சொத்து யாருக்கு பாகமாக கிடைத்தது என்று எனக்கு தெரியுமா என்றால் பாகமாக பிரித்ததே எனக்கு தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியாது. வாதிகள் எதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அவர்களின் சொத்தை அபகரித்துவிட்டதாக கூறி வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். குணசேகரிடமிருந்து முதல் பிரதிவாதி தாவா சொத்தை கிரயம் வாங்கிய விவரம் எனக்கு தெரியாது. முதல் பிரதிவாதி தாவா சொத்தை 2 ஆம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதிய விவரம் எனக்கு தெரியும். 2018 ல் செட்டில்மெண்ட் எழுதினார்கள் என்று நினைக்கிறேன். தாவா சொத்துக்களின் சுவாதினம் மற்றும் அனுபவம் 1,2 பிரதிவாதிகளிடம் உள்ளதா என்றால் தெரியாது யார் வசம் உள்ளது என்று எனக்கு தெரியாது. எனது நிருபண வாக்குமூலத்தில் 1 ஆம் பிரதிவாதி 2 ஆம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் போலியானது என்று எதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் தாவா சொத்தின் அடங்கல் ஆவணத்தை பார்த்தேன் அது வடமலை நடேசன் பெயரில் இருந்தது. அதனால் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் மோடியானது என்று கூறுகிறேன். நான் தற்போது ரத்த பரிசோதனை நிலையம் வைத்து தொழில் செய்து வருகிறேன். தாவா சொத்து உள்ள கிராமத்தில் எனக்கு நிலம் எதுவும் இல்லை. தாவா சொத்திலிருந்து 2, 3 கி.மி தொலைவில் எனது வீடு உள்ளது. தாவா சொத்தின் நான்கெல்லைகள் தெரியாது. தாவா சொத்து குணசேகரனுக்கு பாகமாக கிடைத்து அவரது அனுபவத்திலிருந்த சொத்தை அவர் 1 ஆம் பிரதிவாதிக்கு 2006 ல் கிரயம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அதனை 1 ஆம் பிரதிவாதி 2 ஆம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. நானும் 1,2

வாதிகளும் ஒன்றாக வெளிநாட்டில் வேலை செய்ததன் அடிப்படையில் 1,2 வாதிகளுக்கு ஆதரவாக அவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஒருதலைபட்சமானது என்பதால் அது ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>ம.வி</u>**- இல்லை .

/signed /
செந்தில்வேல்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

R MOHANA
Digitally signed by R MOHANA
Date: 2024.09.30 18:45:35 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி